# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS. 36/2016. நாள்.20.03.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாண்டுரங்கன் | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | ராமமூர்த்தி | **மதம்** | |
| **முகவரி** | | **தொழில்** | |

**வா.சா.1 ஆஜர். 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வாதிகள் இருவரும் இரட்டையர் அல்ல. தனித்தனியாக பிறந்தார்கள்.வழக்கை தாக்கல் செய்யும்போது 1,2 வாதிகளின் வயதை 10, 10 என குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன்களின் வயதை பொறுத்து எவ்வித ஆவணமும் நிருபிக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். வாதிகள் வழக்கு தாக்கல் செய்யும்போதும், மைனர்கள் என்பதற்கும், தற்போது அவர்கள் மைனர்களாக உள்ளார்கள் என்பதற்கும் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(வாதிகள் மைனர்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்களை எடுத்து வருவதற்காக பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

ஓம்/- எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.